## தற்போது மத்திய அரசின் அதிகார மய்யத்தில் 75% இருக்கும் உயர் ஜாதியினர்க்கு, மேலும் 10% இட ஒதுக்கீடா?

| | உயர்ஜாதி ஏழைகள்? | OBC/SC/ST |
|---|---|---|
| மக்கள் தொகை | 15% | 85% |
| மத்திய அரசில் குரூப் ஏ பதவிகள் | 69% | 31%* |
| குரூப் பி பதவிகள் | 65% | 35%* |
| அரசு வங்கியில் பொதுமேலாளர் பதவி | 422 (94%) | 28 (6%)** |
| துணை மேலாளர் பதவி | 1108 (91%) | 107 (9%)** |
| காப்பீட்டுத் துறையில் பொதுமேலாளர் பதவி | 76 (84%) | 15 (16%)*** |
| துணை மேலாளர் பதவி | 344 (87%) | 52 (13%)*** |

*ஆண்டு அறிக்கை 2016–17/** 1.10.2015 – RTI / ***1.1.2016- RTI

### மத்திய அரசின் குரூப் ஏ மற்றும் பி பதவிகள்

| | | |
|---|---|---|
| குடியரசுத்தலைவர் அலுவலகம் | 75% | 25% |
| துணைக் குடியரசுத் தலைவர் அலுவலகம் | 77% | 23% |
| யு.பி.எஸ்.சி | 65% | 35% |
| தணிக்கை அலுவலகம் (சி.ஏ.ஜி.) | 67% | 33% |
| ரயில்வே | 69% | 31% |

### மத்திய அரசின் 40 பல்கலைக்கழகங்களில்

| | | |
|---|---|---|
| பேராசிரியர்கள் | 95% | 5% |
| இணை பேராசிரியர்கள் | 93% | 7% |
| உதவி பேராசிரியர்கள் | 66% | 34% |

(தகவல் அறியும் சட்டம் மூலம் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஜனவரி 16–17,2019)

அமைப்பு:
**அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பு பணியாளர் நல சங்கங்களின் கூட்டமைப்பு,**
தொடர்பு முகவரி: 139, பிராட்வே, சென்னை 600108. செல்பேசி: 9381007998



## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தமிழக நலன் சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றிட மத்திய அரசை வலியுறுத்தி

# ஆர்ப்பாட்டம்

## 7.3.2019 காலை 11.30 மணி

**அய்.சி.எப். பொதுமேலாளர் அலுவலகம் எதிரில், பெரம்பூர், சென்னை**

கோரிக்கைகள்;

- கிரீமிலேயர் முறையை முற்றிலும் நீக்குக
- உயர்ஜாதியினருக்கு பொருளாதார அடிப்படையிலான 10% இட ஒதுக்கீட்டை ரத்து செய்
- தமிழகத்தில், ரயில்வே உள்ளிட்ட அரசு, பொதுத்துறை நியமனங்களில், தமிழ் நாட்டவர்க்கு முன்னுரிமை கொடு
- பிற்படுத்தப்பட்டோருக்கு தனி அமைச்சகம் அமைத்திடு

அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பு பணியாளர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தமிழக நலன் சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்து, மார்ச்சு 7-ஆம் தேதி (வியாழன்) காலை 11.30 மணி அளவில் சென்னை பெரம்பூரில் உள்ள அய்.சி.எப் பொதுமேலாளர் அலுவலகம் எதிரில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்திட உள்ளது.

ஆர்ப்பாட்டத்தில், மத்திய அரசு மற்றும் பொதுத்துறையில் பணியாற்றும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பெரும் திரளாக கலந்து கொள்கிறார்கள்.

திராவிடர் கழகத் தலைவர் திரு.கி.வீரமணி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

**கிரீமிலேயர் முறையை முற்றிலும் நீக்குக:**

சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளித்திட அரசமைப்புச் சட்டம் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், 'கிரீமிலேயர்' எனும் முறையை அமல்படுத்தி, பிற்படுத்தப்பட்டோருக்கு தொடர்ந்து மத்திய அரசு அநீதி இழைத்து வருகிறது.

இந்நிலையில், தற்போது மத்திய பணியாளர் நல அமைச்சகத்தின் 6.10.2017 தேதியிட்ட ஆணை மேலும் எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றும் நிலையை உருவாக்கி உள்ளது. மத்திய அரசின் பணியாளர் நல அமைச்சகம் 6.10.2017 அன்று வெளியிட்டுள்ள ஆணையின் மூலம், வங்கி உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் அனைவரையும் முன்னேறியவர்கள் (கிரிமிலேயர்) என வரையறை செய்யப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கில், பிற்படுத்தப்பட்டோர் தங்களது பிள்ளைகளுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு பெற முடியாத நிலையை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரான மத்திய அரசின் ஆணை திரும்பப்பெற வேண்டும். அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான 'கிரீமிலேயர்' முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்.

**பிற்படுத்தப்பட்டோருக்கு தனி அமைச்சகம் அமைத்திடு:**

மத்திய அரசில் பழங்குடியினர், மகளிர், சிறுபான்மையினர் ஆகியோர்க்கு தனியாக அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு, அம்மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு அளித்து, செயல்படுத்தப்படுகிறது. நாட்டின் பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்டோருக்கு தனியாக அமைச்சகம் ஏற்படுத்தப்படவில்லை. சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடும் மிகக்குறைவாக ஒதுக்கப்படுகிறது. தமிழகம் உள்ளிட்ட மா நிலங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டு செயல்படுவது போன்று, மத்திய அரசிலும், பிற்படுத்தப்பட்டோருக்கு தனி அமைச்சகம் உருவாக்கி, செயலாற்றிட வேண்டும்.

**தமிழகத்தில், ரயில்வே உள்ளிட்ட அரசு, பொதுத்துறை நியமனங்களில், தமிழ் நாட்டவர்க்கு முன்னுரிமை கொடு:**

மத்திய அரசின் துறைகள், வங்கி உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களில், தமிழகத்தில் ஏற்படும் காலியிடங்களில், வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் பணியாற்றி வரும் சூழலை மத்திய அரசு ஏற்படுத்தி வருகிறது. அதற்கேற்ற வகையில் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. தமிழகம் மட்டுமின்றி, தென்மாநிலங்கள் முழுவதும் இது போன்று நடைபெறுவதாக செய்திகள் வந்துள்ளன. அதிகாரி பதவிகள் மட்டுமல்லாது, குரூப் சி மற்று டி, அதாவது கிளார்க் மற்றும் அதற்கும் கீழே உள்ள பதவிகளிலும், இந்த நிலை தற்போது ஏற்பட்டு உள்ளது.

தெற்கு ரயில்வேயின் திருச்சி பொன்மலை கோட்டத்தில் எலக்ட்ரீ ஷியன், பிட்டர், மெக்கானிக், வெல்டர் உள்ளிட்ட தொழில் பழகுநர் இடங்களுக்கு 1765 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில், வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் 1600 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பது அதிர்ச்சி தருகிறது. குறிப்பாக தெற்கு ரயில்வேயில் அனைத்து நிலைகளிலும் தொடர்ந்து வடமாநிலத்தவர்களே பணி நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்களின் வேலை வாய்ப்பில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று குஜராத், மத்தியபிரதேசம், கருநாடகம் உள்ளிட்ட மாநிலங்கள் தனிச் சட்டமே இயற்றி உள்ளன. தமிழகத்தில் சுமார் 80 லட்சம் படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு இன்றி தவிக்கும் நிலையில், வெளி மாநிலங்களிலிருந்து பணியாளர்களைக் கொண்டுவந்து மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்குரிய சட்டத்தை மத்திய அரசும், மாநில அரசும் இயற்றிட வேண்டும்.

**உயர்ஜாதியினருக்கு பொருளாதார அடிப்படையிலான 10% இட ஒதுக்கீட்டை ரத்து செய்:**

உயர்ஜாதியினரில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கு, அரசின் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்திட வகைசெய்யும் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது. இந்த சட்டம் இந்திய அரசிமைப்பின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிரானதாகும். இந்த சட்டத்தை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும்.

இந்த உயர் ஜாதியினர்க்கு, எந்த காலத்திலும், கல்வி உள்ளிட்ட எந்த உரிமையும் மறுக்கப்படவில்லை. தீண்டாமை போன்ற சமூகஇழிவுகளுக்கு ஆட்படவில்லை.

அரசு அதிகாரத்தில் 75 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ள உயர்ஜாதியினர்க்கு, மேலும் 10 விழுக்காடு இடஒதுக்கீடு தருவது என்பது, சமூக நீதிக்கொள்கையின் தத்துவத்தையே கேலிக்குரியதாக்குகிறது.

சமூகநீதிக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட தந்தை பெரியார், அரசமைப்பில் இடஒதுக்கீடு கொள்கை இடம் பெற செய்த பாபாசாகிப் அம்பேத்கர் ஆகியோர் வகுத்து தந்த சமூக நீதிக் கொள்கையை முற்றிலுமாக நீக்கிடும் ஓர் திட்டம்தான் அரசு அதிகாரத்தில் உள்ளவர்கள் பிறப்பித்துள்ள இந்த சட்டம்.

உயர்ஜாதியினர்க்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டத்தை எதிர்க்கும் அதே வேலையில், இதன் ஆபத்தை உணர்ந்து, சமூகநீதியைக் காப்பாற்றிட, அனைவரும் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என அனைத்து சமூகநீதி அமைப்புகளையும், அகில இந்திய பிற்படுத்தப்பட்ட பணியாளர் நல சங்கங்களின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுக்கிறது.